செம்மண்

நிலம் 3 துகள் 156 வள்ளுவர் ஆண்டு 2052, 15 - 21 ஆடி 2023 வாரமலர் பக்கங்கள் 17

# புத்தரின் பரி நிர்வாணமும் சுமணதேரரின் நிர்வாணமும்

இலங்கையில் வாழும் பௌத்த மக்களைத் தலைகுனிய வைத்த சம்பவம் ஒன்றைப் பல்லேகல சுமணதேரர் அண்மையில் நிகழத்தியிருந்தார். இரண்டு பெண்களைத் தனது அறையில் வைத்துப் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபட்ட அவரையும் அந்தப் பெண்களையும் நிர்வாணப்படுத்திச் சமூகவலைத்தளங்களில் வெளியிட்டிருந்தார்கள். இந்து மதத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அதிலிருந்து விடுபட்டு மக்களுக்கான வாழ்வியல் தத்துவம் ஒன்றை முன்வைத்தவர் கௌதம புத்தர். அதுவே தற்போது பௌத்த மதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மன்னர் குலத்தில் பிறந்த புத்தர் ஆடம்பரமாக வாழ்ந்து, குடும்ப வாழ்வில் புகுந்து பின்னர் வாழ்க்கையைத் துறந்து பரிநிர்வாணம் அடைந்தார். ஆனால், அவரது கொள்கையைப் பின்பற்ற முற்பட்ட பல்லேகல சுமணதேரரோ புத்தருக்கு நேர் எதிராகச் செயற்பட்டுத் துறவு

நாகராசா



வாழ்வைத் துறந்து லௌகீக வாழ்க்கைக்குள் புகுந்து தன்னை நிர்வாணம் ஆக்கியதுடன் மற்றவர்களையும் நிர்வாணமாக்கித் தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறார்.

**பௌத்த துறவிகளின் பௌத்தப் பற்று**

சிங்கள மக்களைப் பௌத்தத்தின் பெயரால் தூண்டிவிடுபவர்களாகவே பௌத்த துறவிகள் காணப்படுகின்றனர். திம்புலாகல பிக்கு, தற்போது மட்டக்களப்பிலுள்ள மங்களராம விகாரைப் பிக்கு, பொதுபலசேனாவின் தலைவர் அத்தே ஞானசாரதேரர் ஆகியோர் இதில் முன்னிலை வகிக்கின்றனர். அரசியல்வாதிகள் ஒருபுறம் மக்களைக் கட்டுப்படுத்திவர பௌத்த பிக்குகளான இவர்கள் மக்களைப் பௌத்த மதத்தின் பெயரால் தமது கட்டுப்பாட்டுக்குள் கட்டி வைத்திருக்கின்றனர். அரசியல் வரப்பிரசாதங்களையும், ஏனைய சலுகைகளையும் பெறுவதற்காகவே காவியுடை எனும் பௌத்தப் பற்றுடனும், பௌத்த துறவிகள் எனும் போர்வையுடனும் இவர்கள் உலா வருகிறார்கள். இதன் வழி பிறந்ததாகவே இவர்களின் பௌத்தப் பற்று இருக்கிறது.



**ஆட்சியாளர்களுக்கு ஆசீர்வாதம்**

இலங்கையை ஆளுகின்ற தகுதி சிங்கள பௌத்தனுக்கு மட்டுமே உண்டு எனப் பௌத்த பிக்குகள் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். இதனால் பௌத்த பீடங்களதும் பௌத்த பிக்குகளதும் ஆதரவு தமக்கு அவசியம் என அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் நினைப்பதால் பௌத்த பிக்குகள் எப்போதும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றனர். இதனால், இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள், பௌத்த பீடங்கள், படைத்தரப்பு ஆகிய 3தரப்பினரும் ஒன்றோடொன்று பிண்ணிப் பிணைந்த நிலையில் ஆட்சியைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கெடுக்கின்றனர்.


> இந்த நாட்டின் முக்கிய தலைவராக விளங்கிய சிங்கள மக்களுக்கு அதிகம் சேவையாற்றிய எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்காவை 1959ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி கல்துவே சோமராம என்ற பௌத்த பிக்கு சுட்டுக்கொன்றார். பௌத்த பிக்குகள் சிங்கள மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் பல அநீதிகளை விளைவித்தவர்கள் என்பதும் மறுப்பதற்கில்லை

**போருக்குப் பின்னர் பிக்குகளின் நிலைப்பாடு**

போர் நடந்த காலத்தில் படைக்கு ஆட்சேர்ப்பதிலும் எல்லை புறக் கிராமங்களைப் பாதுகாப்பதிலும் மக்களுடன் நின்று செயற்பட்டதில் பிக்குகள் அதிக பங்கெடுத்தனர். ஊர்காவல் படையின் மையமாக அவ்வூர்ப் புத்த விகாரைகளே செயற்பட்டன. பிக்குகள் அதன் முக்கிய பிரதிநிதிகளாக நின்று அதிக பின்னூட்டல்களைக் கொடுத்தனர். ஆட்சியாளர்களுக்கும் படையினருக்கும் காவல்துறையினருக்கும் இந்தப் பிக்குகளின்தேவை அதிகமிருந்தது. போரை வெற்றிகொண்டதும் பிக்குகள் முக்கிய பிரமுகர்களாகவும் அவ்வூர் மக்களின் காவல் தெய்வங்கள் போலவும் மதிக்கப்பட்டனர். கிராம மக்கள் தமது தேவைகளுக்காகப் பிரதேச செயலர்களையோ மாவட்டச் செயலர்களையோ அரசியல்வாதிகளையோ நாடிச் செல்வதைவிடப் பிக்குகளையே நாடிச் சென்று சொல்லித் தீர்த்துக்கொண்டனர். தமது பிரச்சினைகளைத் தமது ஊர்ப் பன்சல (விகாரை) பிக்குவிடம் வேண்டுகோளாக விடுக்கும் பண்பே சிங்களப் பகுதிகளில் இப்போதும் காணப்படுகிறது. அதன் அடிப்படையில் அரச அலுவலர்களையும் அரசியல்வாதிகளையும் கிராமப் பன்சலக்கு அழைத்து மக்களின் தேவைகளை மக்கள் மூலமே சொல்ல வைத்தார்கள் பிக்குகள். இது அரச பொறிமுறைகளையும் நடைமுறைகளையும் தாண்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இருந்தது. மக்களின் ஆதரவு தமக்குத் தேவை என்றால் அரசியல்வாதிகள் அந்தப் பிரதேசப் பிக்குவைத் தம்வசப்படுத்த வேண்டியிருந்தது. இதனால் பிக்களின் செல்வாக்குப் போருக்குப் பின்னரும் அரசியலில் அதிகரித்தது.

போர் முடிவுற்ற பின்னர் கிராமங்களை விட்டு வெளியேறிய

மக்களை மீள்குடியேற்றுவதிலும் போர் காரமாகக் கைவிடப்பட்ட அல்லது உடைக்கப்பட்ட விகாரைகளைக் கட்டியெழுப்புவதிலும் உள்ளூர்ப் பிக்குகள் அதிகன கவனம் செலுத்தினார்கள். குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் இந்தச் செயற்பாடுகள் மிக நுட்பமாக முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் பணிகள் பூர்த்தியடைந்த நிலையிலேயே பின்னர் வடக்குக் கிழக்கில் பிக்குகள் களமிறங்கினார்கள்.



**எல்லோருக்கும் ஆசி வழங்கினார்கள்**

பௌத்த துறவிகள் எல்லோருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆசி வழங்குபவர்களாகவும் பௌத்தர்களின் சாவு வீடுகளில் கலந்துகொண்டு இறுதிக் கிரியைகளைச் செய்பவர்களாகவும் இருப்பதால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பௌத்த மக்களுடன் ஒன்றித்து நிற்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள். பௌத்த துறவியின் வருகை சிங்கள வீடுகளில் அதி முக்கியம் பெறுகிறது. தற்போது பாலியல் விடயத்தில்



சிக்கியிருக்கும் சுமணதேரர் என்கிற பிக்கு முன்னாள் அரசதலைவர் மகிந்தவுக்கு ஆசி வழங்கி அவருக்கு நூல் கட்டியவர். தனியார் முதலீட்டு நிறுவனத்தை நடத்திய தில்றுக்சி என்கிற பெண்ணிடம் 45 கோடி ரூபாவை முதலீடு செய்த பொது பல சேனா அமைப்பின் தலைவரான அத்தேஞானசார தேரருடனும் நெருங்கிய உறவில் இருப்பவர் என்று தெரிகிறது.

**சமூகவலைத்தளத்தில் காராசாரம்**

பௌத்த பிக்குகள் சுத்தமானவர்கள் என்று சிங்கள பௌத்த மக்கள் நம்பியிருக்கப் பல்லேகல சுமணதேரர் நிர்வாணப் பெண்களுடன் தொடர்புபட்டதைப் பொதுவெளிக்குக் கொண்டு வந்து பரப்பியுள்ளார்கள் சமூகவலைத்தளப் பாவனையாளர்கள். இது பௌத்த பீடங்களுக்கும் தனிப்பட்ட பிக்குகளுக்கும் பெரிய பிரச்சினையாகிருக்கிறது. இதுவிடயத்தில் பல பிக்குகள் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர். இதுபற்றி ஒரு பிக்கு ஊடகங்களில் கருத்து வெளியிட்டபோது கடந்த காலங்களில் பௌத்த துறவிகள் எத்தகைய அர்ப்பணிப்பான சேவைகளை மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த ஒரு விடயத்தைத் தூக்கிப் பிடிக்கக்கூடாது இந்த ஒளிப்படங்களை வெளியிட்டவர்களின் பின்னணியில் ஏதோ சதியிருக்கிறது. அரச சார்பற்ற அமைப்புகளின் பலமும் வெளிநாட்டுச் சதியும் இருக்கிறது - என்று குறிப்பிட்டார். இந்த நாட்டின் முக்கிய தலைவராக விளங்கிய சிங்கள மக்களுக்கு அதிகம் சேவையாற்றிய எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவை 1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி கல்துவே சோமராம என்ற பௌத்த பிக்கு சுட்டுக் கொன்றார். பௌத்த பிக்குகள் சிங்கள மக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் பல அநீதிகளை விளைவித்தவர்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. பௌத்த துறவிகள் தாம் கல்வி கற்கும் பல்கலைக் கழகங்களில்கூட மது பானம் உட்கொண்ட நிலையில் அடாவடித்தனத்தில் ஈடுபட்ட சம்பவங்களும் உண்டு.

இலங்கையில் எந்தச் சம்பவம் இடம் பெற்றாலும் அதில் பௌத்த துறவிகளின் வருகை சண்டித்தனமாக இருப்பதையும் காணமுடிகிறது. இத்தகைய சம்பவங்கள் இலங்கையில் பௌத்த மதத்தையும் அதன் பாரம்பரியத்தையும் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. அதன் இன்னோர் பரிமாணத்தைப் பல்லேகல சுமணதேரர் உருவாக்கியிருக்கிறார். கௌதம புத்தர் உலகுக்கு விட்டுச்சென்ற பரிநிர்வாணம் என்ற விடயத்தைச் சிங்கள மக்களும் பிக்குகளும் வெறும் உடல் நிர்வாணமாக விளங்கிக் கொண்டதன் விளைவே 1983 இனக்கலவரத்தின்போதும் (தமிழர் நிர்வாணமாக்கப்பட்டுத் தாக்கப்பட்டர்) இறுதிப்போரின் போதும் (பல தமிழர்கள் நிர்வாணப் படுத்தப்பட்டனர்) தற்போது சுமண தேரரும் பெண்களும் நிர்வாணமாக்கப்பட்டதன் பின்னணி.



நியூட்டன்

# நன்மையளிக்கும் நாடாளுமன்றம்...!

> நாடாளுமன்றத்தில் மகிந்த தரப்பினரின் ஆதரவும் அவருக்குண்டு. இந்த நிலையில் எந்த முன்மொழிவுகளைக் கொண்டு வந்தாலும் மகிந்த தரப்பினர் காராம்பசுபோல தமது வாக்குகளை ரணிலுக்குச் சொரிந்து கொண்டேயிருப்பார்கள்.

தற்போதுள்ள இலங்கையின் நாடாளுமன்றமானது ஆட்சியாளர்களைப் பொறுத்தவரைக் காராம் பசுவைப்போல அவர்களுக்கு எப்போதும் நன்மையளிப்பதாகவே இருக்கிறது. தமக்குத் தேவையான எந்த விடயமானாலும் அதை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து விவாதித்தோ, வாக்கெடுப்பு நடத்தியோ நடாளுமன்ற ஜனநாயக முறைப்படி பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றிவிடும் வரம் இதன்மூலம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்ட ஓர் ஏற்பாடு என்பதால் இதைத் தவறு என்று யாரும் கூற முடியாது. எதிர்க் கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகள் என எல்லாமே பலவீனமாக இருப்பதும் தமக்குள் ஒற்றுமையில்லாது இருப்பதும் நாடாளுமன்றம் என்கிற காரம்பசுவின் பாலை மேலும் சுரக்க வைக்கின்றன. இதனால்தான் தாம் நினைத்த அனைத்தையும் நிறைவேற்றித் தரும் நாடாளுமன்றமானது ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை ஒரு காரம்பசுவாக உள்ளது.

**ரணிலின் ஆற்றல்**

நாடாளுமன்ற நடைமுறைகள் பற்றியும் சட்ட நுணுக்கங்கள் பற்றியும் அதிலுள்ள குறைபாடுகள் பற்றியும் ஆழமான அறிவுள்ளதாலேயே தனது கட்சிக்கும் தனக்கும் இருந்த ஒரே ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை வைத்து ரணிலால் அரசதலைவராக முடிந்தது. காலிமுகத்திடல் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்தபோது அப்போதைய அரச கோட்டாபய துரத்தப்பட்டார். அதற்கு அடுத்ததாக எதுவும் இல்லை என்று போராட்டக்காரர்கள் வெற்றிக்களிப்பில் இருந்தபோது ரணில் தலைமை அமைச்சராகிப் பதில் அரச தலைவராக மாறவிருந்தார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் போராட்டக்காரர்களுடன் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துக் கூறினர். ரணில்விக்கிரமசிங்கவைப்



பதில் அரசதலைவராக ஒரு நாள்கூட இருக்க விடாது தடுப்பது பேராட்டக்காரர்களாகிய உங்கள் கைகளிலேயே உள்ளது. அவ்வாறு ரணில் பதவியேற்றுவிட்டால் அதன் பின்னர் எதுவும் செய்ய முடியாது என்றார் சுமந்திரன். ஆனால் அதைத் தடுக்கும் வல்லமை போராட்டக்காரர்களிடமோ எதிர்க்கட்சிகளிடமோ இருக்கவில்லை. எல்லா விடயங்களையும் புதிது புதிதாகப் பலராலும் சிந்திக்க முடிந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளோ நிறுவனமயப்பட்ட தன்மையோ அவர்களிடம் இருக்கவில்லை. இதனால் ரணில் தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டிருக்கிறார். பன்னாட்டு அரசியல் சூழலில் முக்கியம்பெறும் இந்தியா, சீனா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா என அனைவரையும் ஒரே நேரத்தில் கையாளும் வல்லமை அரசதலைவர் ரணிலுக்கு உண்டு என்பது கடந்த சில மாதங்களாக நடந்துவரும் ராஜதந்திரக் காய் நகர்த்தல்கள் மூலம் அறியமுடிகிறது. நாடாளுமன்றத்தில் மகிந்த தரப்பினரின் ஆதரவும் அவருக்குண்டு. இந்த நிலையில் எந்த முன்மொழிவுகளைக் கொண்டுவந்தாலும் மகிந்த தரப்பினர் காராம்பசுபோல தமது வாக்குகளை ரணிலுக்குச் சொரிந்துகொண்டேயிருப்பார்கள். இன்னோர் தேர்தல் நடக்கும் வரை தற்போதுள்ள ஜனநாயக நடைமுறையே தொடர்ந்தும் அரங்கேற வாய்ப்புண்டு,

அரசைப் பலகோணங்களிலும் பலராலும் விமர்சனம் செய்ய முடியுமே தவிர அதன் செயற்பாடுகளையும் திட்டங்களையும் தடுத்துவிட முடியாது. பெரும்பான்மைப் பலத்துடன் நாடாளுமன்றத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகிறது. இதனால்தான் தற்போது காணப்படும் நாடாளுமன்றமானது ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை காராம்பசுவைப்போல தேவைக்கு ஏற்ப பால் சொரிந்த வண்ணமிருக்கிறது. இதனால் இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வகையில் தேர்தல் ஒன்றை நடத்துவதுகூட இனிவரும் நாள்களில் சாத்தியமா என்பது கேள்விக்குறியே. ஆனால், தற்போதுள்ள நாடாளுமன்றத்தை வேறு சில காரணங்களை முன்வைத்து மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு ஆட்சியாளர்களால் முடியும். தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதையே விரும்பவர். காரணம், இந்த 225 உறுப்பினர்களில் 3 இல் ஒரு பங்கினர்கூட அடுத்த தேர்தலில் வெல்லப்போவதில்லை என்பதால் மக்களின் வாக்குகள் இல்லாமலே பதவியை நீடிப்பது என்பது அவர்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டமே. இதனால் இந்த நாடாளுமன்றமும் அதில் இனி அரங்கேறப் போகும் விடயங்களும் ஆட்சியாளர்கள் நினைப்பதற்கு மாறாக நடக்க வாய்ப் பில்லை. அரசுக்குக் கிடைத்த பெரும் வரம் என்றே இந்தக் காராம்பசுவைக் குறிப்பிட முடியும்.

# 13 எனும் துரதிர்ஷ்டம்

**பரஞ்சோதி**

13ஆவது இலக்கம் ஒரு துரதிஷ்டமான இலக்கம் எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அது நல்ல எடுத்துக்காட்டாகவே இருக்கிறது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் 13ஆவது அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. புலிகளைத் தவிர ஏனைய இயக்கங்களும் தமிழ் அரசுக் கட்சியும் அதை ஏற்றுக்கொண்டன. தமிழருக்கான சிறந்த தீர்வு, அதில் நல்ல அம்சங்கள் பல உள்ளன என்று கூறி வந்த அப்போதைய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் ரமணித் தோழர் (தற்போதைய அரசியல் ஆய்வாளரும் மூத்த சட்டத்தரணியுமான ஜோதிலிங்கம்) போன்றவர்கள் தற்போது 13இல் எந்தத் தீர்வும் இல்லை என்றும் அது இந்திய அரசும் இலங்கை அரசும் செய்துகொண்ட ஒப்பந்தமே தவிர தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வையும் கொண்டுவரப்போவதில்லை என்றும் 13ஐத் தமிழ்த் தலைவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் கருத்துரைத்து வருகின்றனர்.

**பலர் களமிறங்கி எஞ்சியுள்ள புலிகளை அழித்துவிடலாம் என நம்பினர். அது சாத்தியப்படாத நிலையில் 1990 மார்ச் மாதம் அளவில் இந்தியா படையினர் இலங்கையிலிருந்து தனது படையை திரும்பப்பெற்றது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியா புதிதாகத் தலையிடவில்லை**

## 13ஆவது தீர்வு திட்டம்

1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் ரஜீவ்காந்தியும் இலங்கை அரசதலைவர் ஜெயவர்த்தனவும் ஒப்பமிட்டார்கள். இதில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தற்காலிக இணைப்பு, காணி அதிகாரம் காவல்துறை அதிகாரம் எனத் தமிழர் தரப்புக்குச் சாதகமான பல விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் 1987 ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்கும் இடையே மோதல் நடந்தது. அப்போது புலிகளின் தொகை ஆயிரத்துக்கும் குறைவாக இருந்தது. இந்தியப் படையினருடன் இணைந்து ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ். புளொட், ரெலோ ஆகிய அமைப்புகள் புலிக ளுக்கு எதிராகக் களமிறங்கின. வரதராஜப்பெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன் (அப்போது நடந்த பலவந்த ஆட்சேர்ப்பு, படு கொலைகள் என்பவற்றால் மண்டையன்



# பம்பர்

*பரவாயில்லை ரகம்*



**கதை**

சின்னச் சின்னத் திருட்டுகளைச் செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார் தூத்துக்குடியைச் சேர்ந்த புலிப்பாண்டி (வெற்றி). பணம் சம்பாதித்து வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வந்துவிட வேண்டும் என நினைக்கும் அவரை காவல் துறை கைது செய்யத் தீர்மானிக்கிறது. அதிலிருந்து தப்பிப்பதற்காக ஐயப்ப விரதத்துக்கு மாலை போட்டுச் சபரிமலைக்குச் செல்கிறார். அங்கு அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்கும் இஸ்மாயிலை (ஹரீஷ் பெரேடி) சந்தித்து அவரிடம் அதிர்ஷ்டலாபச் சீட்டு ஒன்றையும் வாங்கி, அதை அங்கேயே தொலைத்துவிடுகிறார். ஆனால், அவர் வாங்கிய சீட்டுக்கு ரூ.10 கோடி பரிசுத் தொகை விழுகிறது. அதை எடுத்து வைத்திருந்த இஸ்மாயில் தனது குடும்பத்தின் எதிர்ப்பையும் மீறி புலிப்பாண்டியிடம் ஒப்படைப்பதற்காகத் தூத்துக்குடிக்குச் செல்கிறார். அவர் புலிப்பாண்டியைக் கண்டறிந்து அந்தச் சீட்டை அவரிடம் கொடுத்தாரா? இல்லையா? அதன் பின் என்ன நடந்தது? என்பதுதான் திரைக்கதை.

உலகப் பொதுப் பிரச்சினையான பணத்தை மையமாக வைத்து இருவேறு மனித உணர்வுகள் கொண்டவர்களை எதிரெதிர்த் திசையில் நிறுத்தி அறத்தின் வழியே நடப்பவரின் கரடுமுரடான பாதையை வெளிச்சமிட்டுக்காட்டியிருக்கிறார் இயக்குநர் செல்வகுமார். பேராசைக்கும், நேர்மைக்குமான தராசில் ஆடும் மனித மன ஓட் டங்கள் சுவாரஸ்யம். இந்த இரண்டுக்கும் இடையிலான புள்ளியை நம்மால் எளிதில் தொடர்பு செய்து கொள்ள முடிவது படத்தின் பலம்.




குழுத் தலைவர் என அழைக்கப்பட்டார்.) செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், பரந்தன்ராஜன் எனப் பலர் களமிறங்கி எஞ்சியுள்ள புலிகளை அழித்துவிடலாம் என நம்பினர். அது சாத்தியப்படாத நிலையில் 1990 மார்ச் மாதம் அளவில் இந்தியா படையினர் இலங்கையிலிருந்து தனது படையை திரும்பப்பெற்றது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியா புதிதாகத் தலையிடவில்லை என்றே கூறலாம்.

**சம்பந்தரின் நிலைப்பாடு**

இந்த மாதம் இலங்கையின் அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ள நிலையில் இலங்கைத் தமிழருக்கான தீர்வு விடயத்தில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி ரணிலுடன் எதையெல்லாம் பேசவேண்டும் என்ற தமது ஆலோசனையைத் தெரிவிப்பதற்காகத் தமிழ் தலைவர்கள் மோடிக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் என்கிற செய்தி வெளியாகியுள்ளது. தமிழ் மக்களின் ஒருமித்த குரலில் ஒரு கடிதத்தில் தெரிவித்திருக்க வேண்டிய நிலையில் ஒற்றுமையில்லாது ஆளுக்கொரு கடிதம் அனுப்பியுள்ளனர்.

கூட்டமைப்பிலிருந்து விலகிய ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஆகியன ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற தலைப்பில் ஒரு கடிதத்தை எழுதி அதில் சம்பந்தனை ஒப்பமிடக் கேட்ட போது, நீங்கள் 13ஐ நடைமுறைப்படுத்துமாறு கேட்டிருக்கிறீர்கள் அதற்குநான் ஒரு போதும் சம்மதிக்கப்போவதில்லை. 13பிளஸ் என்பதே எனது நிலைப்பாடு. என்று கூறி ஒப்பமிடாது தவிர்த்திருந்தார். இப்போது சம்பந்தன் தலைமையில் அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர் என்று தெரிகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலம் இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா முன்வைத்த விடயம் 13ஆவது சீர்திருத்தமே. அதைப் பிரபாகரன் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்களுக்கு அதைவிட நல்ல தீர்வைப் பெறப் போராடி மடிந்தார். ஆனால், அதை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்கிற குழப்பத்தில் சம்பந்தன் போன்ற போலித் தேசிய அரசியல்வாதிகள் செயற்பட்டுவருகிறார்கள். தமிழ்த் தரப்பினர் ஏற்றுக்கொண்டால்கூட அதை வழங்கலாமா, இல்லையா? என்பதே மறுதரப்பில் முடிவாகாத நிலையில் 13 கிடந்து அல்லல்படுகிறது. தமிழர் விடயத்தில் 13என்பது அதிர்ஷ்டமில்லாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

**பாத்திரங்கள்**

தமிழ் சினிமாவின் ஓர் அழுத்தமான, நேர்மையான ஒரு முஸ்லிம் கதாபாத்திரமாக ஹரீஷ் பெரடி. வீடே அடமானம் வைக்கும் சூழலுக்கு வந்தாலும் கூட அடுத்தவரின் பணத்துக்கு ஆசைப்படாத கண்ணியமான மனிதர். வயதுக்கு ஏற்ற பொறுமை, நிதானம், சொற்களில் முதிர்ச்சி என தான் ஏற்றிருக்கும் கதாபாத்திரத்தை செம்மையுறச் செய்கிறார். பணத்தை வாசற்படியில் வைத்துவிட்டு செருப்பை கழட்டி அவர் வீட்டுக்குள் அவர் நுழையும் காட்சி கவித்துவம். இப்படியான இரண்டு மூன்று காட்சிகள் படத்தின் வழி கதை சொல்கின்றன. நாயகன் வெற்றி தன்னால் முடிந்த அளவுக்கு நடித்து கொடுத்திருக்கிறார். ஆனால், முகத்தில் உணர்ச்சிகளுக்கான வறட்சி இல்லாமலில்லை. ஷிவானிக்குக் கதையில் பெரிய இடம் இல்லாவிட்டாலும் நடிப்பில் குறை வைக்கவில்லை. ஜிபி முத்து அப்பாவித்தனமான நடிப்பில் கவனம் பெறுகிறார். தங்கதுரை, கவிதா பாரதி, ஆதிரை, அருவி மதன் உள்ளிட்டோர் தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

லாட்டரி சீட்டில் பரிசு விழுந்ததும் உறவினர்கள், நண்பர்கள், விட்டுச் சென்றவர்கள் என சுற்றியிருப்பவர்களின் ரியாக்ஷன்களும், அதற்கான காட்சிகளும் சுவாரஸ்யம். இறுதிக் காட்சிகள் விறுவிறுப்பைக் கூட்டுகின்றன. விவரம் தெரியாத ஒருவரை தேடிச்செல்லும் ஹரீஷ் பெரடியின் பயணம், பணத்துக்காக தந்தையைக் கொல்லத் துடிக்கும் மகன், பணத்துக்காக நண்பனைக் கொல்லத் திட்டமிடும் நண்பர்கள், இறுதிக் காட்சியில் கரையும் உள்ளங்கள் என மனித மனவோட்டங்கள் திரைக்கதையில் பிரதிபலிப்பது என்கேஜிங். ஆனால், இதெல்லாம் இரண்டாம் பாதியில்தான்.

படத்தின் நோக்கத்திலிருந்து விலகியிருக்கும் முதல் பாதி முழுவதும் புலிப்பாண்டி (வெற்றி) கதாபாத்திரத்தின் வாழ்க்கைச் சூழலை காட்டுகிறேன் என்ற பேரில் நிறைய நேரம் வீண்டிக்கப்பட்டுள்ளது. இதனால், முதல் பாதி ஒருபடமாகவும், இரண்டாம் பாதி ஒரு படமாகவும் விரிவது அயற்சி. சபரிமலைக்கு மாலை போட்டதும் வரும் காதலை இந்தப்படத்தில் தான் பார்க்க முடியும். இறுதிக்காட்சியிலும் சில பலவீனம் உண்டு.

வட்டார வழக்கை யதார்த்துக்கு நெருக்கமாக பேச முயற்சித்திருக்கிறார்கள். இருந்தாலும் பேச்சு வழக்குப் பிரச்சினை துருத்திகொண்டு நிற்கிறது. தேவையில்லாத காட்சிகளால் இழுத்துச் செல்லும் படம் கச்சிதம் கோரிக் கெஞ்சி நிற்பது பரிதாபம்.

தூத்துக்குடியையும், கேரள நிலத்தை இணைத்து தனது காட்சிமொழி கதை சொல்லிருக்கும் வினோத் ரத்தினசாமியின் கமராவின் பங்கு முக்கியமானது. கோவிந்த் வசந்தா வழக்கமான தனது வயலினுக்கு கொஞ்சம் வேலை கொடுத்திருக்கிறார்.கார்த்திக் நேத்தாவின் வரிகள் அழுத்தமாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் அதே முழுப் பாடல் வடிவம் பெறும்போது கோவிந்த் வசந்தாவின் வழக்கமான டச் மிஸ்ஸாவதாக தோன்கிறது. உதாரணமாக, ஹரிஷ் பெரடியின் பயணத்துக்கான பாடலில் கூடுதல் கவனம் செலுத்தாததால் பாடல் பாதியளவு உணர்ச்சியைத்தான் கடத்துகிறது. காசி விஸ்வநாதன் படத்தொகுப்பில் கறார் காட்டியிருந்தால் முதல் பாதியில் மற்றொரு படத்தைப் பார்க்க வேண்டியிருந்திருக்காது.



எது எப்படியிருப்பினும் சிக்கலான மனித உணர்வுகளை பணத்தின் வழியே யதார்த்தமாக அணுகிய விதத்திலும், மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி அறத்தின் பாதையே மேலானது என்பதைச் சொன்ன விதத்திலும், நேர்மையை வலியுறுத்தும் வகையிலும் 'பம்பர்' பரவாயில்லை ரகம்.



# 'எமது துப்பாக்கியைவிட அதி சக்தி வாய்ந்த துப்பாக்கியைக் கடற்புலிகள் வைத்திருந்தனர்'

**மொழியாக்கம்**
**கமலநாதன்**

இலங்கைக் கடற்படையில் உதவி அதிகாரியாகப் பணியாற்றியவர் அனில் மடதெனிய. மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கடற்படைப் படகில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டவர். 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்ட அரசுக்குச் சொந்தமான 'கிறீன் ஓசோன்' என்ற கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். அந்த நிலையில் வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளான அவர் கடற்புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டார். அதன் பின் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி வரை புலிகளின் சிறையிலிருந்தார். போர் முடிவுக்கு வந்த அந்த இறுதி நாளில் மக்களுடன் மக்களாகப் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சென்றடைந்தார். அவர் தனது போர் அனுபவம், புலிகளின் சிறைத் தண்டனை ஆகியன பற்றி 'வெனச' யூரியூப் தளத்தில் கூறியவை இங்கு தரப்படுகின்றன.

'நான் மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு 2003ஆம் ஆண்டில் கடற்படையில் சேர்ந்தேன். 2006ஆம் ஆண்டில் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றுவிட்டுப் பணிக்குத் திரும்பியபோது, திருகோணமலைக்குக் கடமைக்குச் செல்லவேண்டியிருந்தது. திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லவிருந்த 'கிறீன் ஓசோன்' என்ற பெரிய கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய பணி எமக்கு வழங்கப்பட்டது. அதன்படி நான் ஒரு டோறாக் கப்பலின் பொறுப்பாளியாகப் பணியில் ஈடுபட்டேன். அந்த டோறாவில் மாலை 5.30 மணியளவில் வல்வெட்டித்துறைக் கடற்பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தபோது கடற்புலிகளின் படகுகள் கடலில் உலாவுகின்றன என்று தகவல் கிடைத்தது. அவர்கள் 'கிறீன் ஓசோன்' கப்பலைத் தாக்குவதற்காக அங்கு காத்து நிற்பதாக நான் நினைக்கவில்லை. அது அவர்களின் வழமையான பயிற்சி நடவடிக்கை என்று கூறினேன். சற்று நேரத்தில் கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் கிறீன் ஓசோன் கப்பலை நோக்கி நகர்கின்றன என்று தகவல் கிடைத்தது. கிறீன் ஓசோன் கப்பலை இந்தியா நோக்கித் திருப்புமாறு பணிப்பு விடுத்தேன். அப்போது அதில் 300 சிப்பாய்களும் பொதுமக்களும் பயணம் செய்தனர். எமது கப்பலில் 23 மில்லி மீற்றர் ஆயுதம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அதை இயக்குபவனாக நானே இருந்தேன். அதை வைத்துக் கடற்புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தினேன்.

**புலிகள் எதிர்த்துத் தாக்கினார்கள்**

புலிகளின் படகுகளைக் குறி வைத்து நாங்கள் தாக்கியதும் புலிகள்

பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் எமது படகிலிருந்த சிப்பாய் ஒருவருக்குக் குண்டடிபட்டது. அவரது கால்கள் வேறாகவும் இடுப்பின் மேற்பகுதித் தசைகளாகச் சிதைந்தும் படகில் சிதறின. எமது துப்பாக்கியை விட அதிசக்தி வாய்ந்த துப்பாக்கியைக் கடற்புலிகள் வைத்திருக்கிறார்கள் என்பதை புலிகளின் அந்தத் தாக்குதலை வைத்து ஊகிக்க முடிந்தது. நாம் புலிகளின் 2 படகுகளைத் தாக்கி அழித்தோம். பின்னர் ஒரு படகைத் தாக்கிவிட்டு நான்காவது படகினைத் தாக்கியபோது கடற்புலிகளின் தாக்குதலில் எமது கப்பலின் இயந்திரப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் எமது படகை வேகமாகச் செலுத்த முடியவில்லை.

**தற்கொலைப் படகுத் தாக்குதல்**

எமது படகு வேகமாகச் செல்ல முடியாத நிலையில் இருந்தபோது புலிகளின் தற்கொலைப் படகு ஒன்று வேகமாக வந்து எமது படகுடன் மோதியது. அது நேரடியாகத் தாக்காது சறுக்கி விட்டதால் அதில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடிக்கவில்லை. அத்தாக்குதலை நடத்த வந்த தற்கொலையாளிக்கு ஒரு கண்ணும் ஒரு கையும் இல்லை என்பதைக் கண்டேன். பின்னர் அவர் கடலில் குதித்தார். நாம் உடனடியாகச் செயற்பட்டு அந்தப் படகுக்குச் சுட்டு அதை எரியச் செய்தோம். அதன் பின்னர் புலிகள் எமது படகைச் சுற்றி வளைத்தார்கள். எமது படகைக் காப்பாற்ற வந்த மற்றோர் டோறாப் படகு மீதும் தாக்குதலை நடத்தி அதன் இயந்திரப் பகுதியைச் சேதப்படுத்தினார்கள். அதனால் அந்தப் படகையும் வேகமாகச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இரண்டு டோறாக்களையும் புலிகள் சுற்றி வளைத்தனர். பின்னர் புலிகள் தாக்கியதில் எமது சிப்பாய்கள் பலர் கொல்லப்பட்டனர்.

**எமது படகைக் காப்பாற்ற வந்த மற்றோர் டோறாப் படகு மீதும் தாக்குதலை நடத்தி அதன் இயந்திரப் பகுதியைச் சேதப்படுத்தினார்கள். அதனால் அந்தப் படகையும் வேகமாகச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இரண்டு டோறாக்களையும் புலிகள் சுற்றி வளைத்தனர். பின்னர் புலிகள் தாக்கியதில் எமது சிப்பாய்கள் பலர் கொல்லப்பட்டனர்.**

புலிகளின் மற்றொரு தற்கொலைப் படகு எமது படகு மீது தாக்குதலை நடத்தியபோது எமது படகுக்குச் சேதம் ஏற்பட்டது. எனக்கு முகத்திலும் கைகளிலும் தீக்காயங்கள் ஏற்பட்டன. எமது படகுகளில் இருந்து புலிகளின் படகுகளை நோக்கி ஆர்.பி.ஜி. அடித்தபோதிலும் கடல் கொந்தளிப்பாக இருந்ததால் நாம் எதிர்பார்த்தபடி அவை புலிகளின் படகுகளைத் தாக்கவில்லை. (தொடரும்)





02

அருண்பாக்யா

# மிக நுட்பமாகக் கட்டமைக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச் சாதியம்

**பெரிய வீடுகளில் இருப்பவர்கள் 'பெரியவர்கள்'**

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்று உழைத்துவந்த யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி வர்க்கத்தினர் அந்தப் பணத்தை வைத்து ஏற்கனவே தமதாக்கிய மேட்டு நிலங்களில் உயரமாக அத்திபாரம் அமைத்துப் பெரும் கல்வீடுகளைக் கட்டினார்கள். நீர் தேங்கி நிற்கும் பள்ளமான காணிகளிலேயே உயரமாக அத்திபாரம் போடும் தேவையிருக்கும். ஆனால் ஏனைய சாதிக்காரர்களில் இருந்து தம்மை உயர்ந்தவர்களாகவும் பிரமிப்பாகவும் காட்டுவதற்காக உயரமான அத்திபாரம் அமைத்து அந்த வீட்டை மேலும் உயர்த்திக் கட்டினார்கள். காலப்போக்கில் அது மேட்டுக்குடி வேளாளரின் அடையாளமாக மாறியது. அந்தக் காலத்தில் குடிசைகளும், ஓலை வீடுகளும் நிறைந்திருந்த கிராமங்களில் ஆங்காங்கே முளைத்த இந்தப் பெரிய வீடுகள் மக்களை அண்ணார்ந்து பிரமிப்புடன் பார்க்க வைத்தன. அந்த வீடுகளில் இருப்பவர்கள் செல்வந்தர்கள் என்கிற மனநிலையை மாத்திரம் ஏற்படுத்தாமல் உயர்ந்தவர்கள் என்கிற பார்வையையும் தோற்றுவிக்கச் செய்தது.



**தாழ்த்தப்பட்டவர்களைப் புறமொதுக்கும் வீட்டின் அமைப்பு**

மேட்டுக் குடியினர் அமைத்த இத்தகைய பெரிய வீடுகளின் அமைப்பானது தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்படுகிறவர்களைப் புறமொதுக்கிக் கையாளும் விதத்தில் கட்டப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் என்று சுட்டாமல் வறிய, ஏழ்மைப்பட்ட நிலையில் தமக்குப் பணிபுரியும்

தரப்பினரைக் கையாளும் விதத்திலுமாக அதற்குப் பொருந்திப்போகும் விதத்தில் வீடுகள் அமைக்கப்பட்டன. நுழைவாயில், படிகள், குந்துகள், ஓடை அமைப்பு எனப் பலவும் இவ்வாறே அமைக்கப்பட்டன. அதிலும் குறிப்பாகச் சங்கடப்படலை என்றொரு அமைப்பிருந்தது. பிரதான வாசல் (வெளிவாசல்) மரத்தால் அல்லது இரும்பால் அமைக்கப்பட்டிருந்தது. அதில் வேல் போன்ற அமைப்பு இரும்பால் செய்யப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில் பில்டிங் எனப்படும் இரும்பை ஒட்டும் வசதிகள் இருக்கவில்லை. ஆனால், மதில் வேலை செய்பவர்களின் கைவண்ணத்தில் மிக அழகாகவும் உறுதியாகவும் அந்த வேல்கள் செய்யப்பட்டிருந்தன. மன்னர்களின் அரண்மனையில் இருந்த வாசல் கதவில் உள்ளது போன்ற வேல்களே கதவில் பொருத்தப்பட்டிருந்தன. ஆபத்தான நேரங்களில் வாசல் கதவிலுள்ள வேல் அல்லது ஈட்டியைக் கழற்றி எதிரியை நோக்கி வீசும் நிலையும் காணப்பட்டது.

> **மேட்டுக் குடியினர் அமைத்த இத்தகைய பெரிய வீடுகளின் அமைப்பானது தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்படுகிறவர்களைப் புறமொதுக்கிக் கையாளும் விதத்தில் கட்டப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள் என்று சுட்டாமல் வறிய, ஏழ்மைப்பட்ட நிலையில் தமக்குப் பணிபுரியும் தரப்பினரைக் கையாளும் விதத்திலுமாக அதற்குப் பொருந்திப்போகும் விதத்தில் வீடுகள் அமைக்கப்பட்டன**

**சங்கடப் படலை**

சங்கடப் படலை என்பது மிகவும் முக்கியமான ஒரு சொல். ஏனைய சாதிக்காரரை வீட்டுக்குள்ளே எடுக்காதவாறு வாசலில் வைத்தே அவர்களைச் சங்கடப்படுத்திய ஓர் அடையாளச் சின்னமே அது. தாழ்த்தப்பட்ட மக்களை வீட்டுக்குள் எடுக்காது வாசலில் இருந்த சிறிய முகப்புக் கூரையில் அமர வைத்துக் கதைத்துத் திருப்பி அனுப்பினார்கள். அந்தக் காலத்தில் வழிப்போக்கர்கள் நடந்து செல்லும் வழமை இருந்ததால் தண்ணீர் குடிப்பதற்காகத் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் வீட்டுக்குள் வந்து விடக்கூடாது என்ற உள்நோக்கத்துடன் வெளித்திண்ணையில் மண் குடத்தில் தண்ணீர் வைத்தார்கள். ஆனால், இதைச் சிலர் வேளாளரின் பரோபகாரமாகவும் வழிப்போக்கர்களுக்கு உதவும் நோக்குடன் சேவை செய்வதாகவும் கூறுவதுண்டு.

ஆனால், இந்தச் சங்கடப் படலையிலிருக்கும் தண்ணீர்ப் பானையில் உயர்சாதியினர் தண்ணீர் குடிப்பதில்லை. அதில் எல்லாச் சாதிக்காரரும் கையளைவதால் அவர்கள் அதைத் தவிர்த்தனர். இன்றைய காலகட்டத்தில்கூட சில வேளாளர்கள் வீட்டிலிருந்து கிளம்பி மீண்டும் வீடு திரும்புப் வரை வேறு இடங்களில் தண்ணீர் குடிப்பதுமில்லை. உணவுண்பதுமில்லை. இவ்வாறான சங்கடப் படலை அமைப்புள்ள வீடுகள் கிராமத்தில் ஒன்று அல்லது இரண்டு ஆவது இருந்தன. அவர்களே அந்த ஊரில் படிப்பிலும் பணத்திலும் உயர்ந்தவர்களாக இருந்தார்கள்.



சங்கடப் படலையைத் தாண்டி வீட்டுக்கள் செல்லும் ஒருவர் வேளாளர் அல்லாதவராக இருந்தால் முன் வாசலில் இருக்கும் உயர்ந்த படிக்கட்டில் முதலாவது படியில் அமர்ந்திருக்க தலைப்பாகை கட்டிய துணியைக் கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு அடியிலுள்ள படியில் அமர்ந்து கொள்வார்) அந்த வீட்டுக்கார வேளாளர் மேலேயுள்ள படியில் அமர்ந்து கதை சொல்வது வழக்கம். தாழ் அங்கிருந்து சென்றதும் அவர் அமர்ந்திருந்த கீழ்ப்படிக்குத் தண்ணீருற்றிக் கழுவும் வழக்கமும் இருந்தது.



கதிரேசன் காத்தவராயன்

# மெய்தானோ உதுகள்?

அண்டைக்கதிலை சுதுமலையிலை ஒரு அலுவலாய்ப் போயிருந்தன். முருகேசரும் கூட வந்தார். அதிலை கிட்டத்தானே எண்டுபோட்டு சைக்கிளுகளிலைதான் போனம். மருதடியிலை போய்ஏரேக்கை குழம்பிப் போனன். 'கதிரேசண்ணை இதென்னப்பா? றோட்டுமாறி வந்திட்டமோ?' எண்டு முருகேசர் கேட்டார். 'நானும் உதைத்தான் முருகேசு யோசிச்சுக் குழம்பிப்போனன்' எண்டு சிரிச்சன்.

'சும்மா சொல்லப்படாது... கறிசோறு போட்டுச் சாப்பிடலாம்...என்னண்ணை?' எண்டு கேட்டார் முருகேசர். 'ஓஓஓ...வடிவாச் சாப்பிடலாம்... மோரைச் சொதியை விடேலாது...முந்திக் கிடந்ததிலையெண்டால் பாயாசமே விடலாதல்லோ?' எண்டு நான் சொல்ல முருகேசர் சிரச்சார். ரண்டு சத்தமாச் சிரிப்புக் கேட்டுது. மெதுவாத் திரும்பினால் குமரேசர்.

அந்தோனியார் கோயிலடியிலை நிப்பாட்டினம். நல்ல நிழல்தானே இருந்துகொண்டம். 'என்ன கதிரேசு ஏதோ புழுகினமாதிரிக்கிடந்துது?' எண்டு குமரேசர் கதையைத் தொடக்கினார். 'புழுகேல்லை... புழுகத்திலை சொன்னனானப்பா' எண்டன். 'றோட்டு பாத்தியளே? வலு சோக்காயல்லே கிடக்கு' எண்டு முருகேசர் சொன்னதுக்கு குமரேசர் ஒரு விரக்திச் சிரிப்பை காட்டினார்.

'என்னப்பா குமரேசு...சிரிப்புப் பிழையாக் கிடக்குது?' எண்டன். 'ம்ம்..ம்ம்.. வெளிப்பூச்சிலை விழுந்திட்டாய் கதிரேசு... இது சரியான றோட்டோ?' எண்டு கேட்டு நிப்பாட்டினார் குமரேசர். 'ஏனப்பா இடையிலை நிண்ட றோட்டுவேலை இப்பவாவது நடக்குதே எண்டில்லாமல் சலிக்கிறாய்...' எண்டு முருகேசர் ஆவலானார்.

சங்கடப் படலை இல்லாத வீடுகளில் குறைந்த சாதிக்காரர் ஒருவர் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டால் செம்பில் கொண்டு வந்து அதை உயர்த்தி நீரை ஊற்றும்போது வந்தவர் இரு கைகளாலும் ஏந்தி வாயால் உறிஞ்சிக் குடிப்பது வழக்கம். இதன் அடுத்த கட்டமாகக் குறைந்த சாதிக்காரருக்கு எனத் தகர மூக்குப் பேணியோ பழைய செம்போ சிரட்டையோ தனியாக வைத்திருந்தார்கள். இத்தகைய சாப்பாட்டுக் கோப்பைகள் குவளைகள் பல வீடுகளில் இன்றுவரை தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் என்ற உணர்வைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குள் ஏற்படுத்திய நுணுக்கமான நடைமுறைகளாகவே இவை இருந்தன.

வெளியிலுள்ள பெரிய வாசல் படிIயைத் தாண்டி உயர் சாதிக்காரர் மட்டுமே விறாந்தை, உள் அறைகள் எனச் செல்ல முடியும். ஏனைய சாதிக்காரர் தொழில் ரீதியாக வீட்டுக்குள் செல்லவேண்டி ஏற்பட்டால், வீட்டின் பின்புறமாக, அல்லது ஒதுக்குப் புறமாகவே அவர்களை அழைத்துச் செல்வது வழக்கம்.

இவ்வாறாக அந்த வீட்டின் அமைப்பும் மதில்களின் கட்டுமாணமும் (அவ்வூரின் பெரும் பகுதி வேலிகள் ஓலையால் அடைக்கப்பட்டிருந்தன) வேளாளர் என்றால் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏனைய சாதிக்காரருக்கு இயல்பிலேயே ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன. தற்போது அந்தக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளைவிடப் பெரிய வீடுகளை வேளாளர் அல்லாத பலர் கட்டியிருக்கிறபோதிலும் 'உயர்ந்தவர்கள்' எண்ணத்தை அந்தக் காலத்தில் ஏற்படுத்தியது போல வேறு பிரிவினரைப் பிரித்தாளும், தனித்துக் கையாளும் எந்தக் கட்டமைப்புக் களையும் இவை கொண்டிருக்கவில்லை.

(தொடரும்)

'இடையிலை நிண்டது நடக்குதேயெண்ட திலை சந்தோசந்தான்... ஆனால் வேலையின்ரை தரமல்லே கவலையாக் கிடக்குது? இப்ப செய்யிற வேலை கொஞ்சக் காலத்துக்குத்தான் நிண்டுபிடிக்குமாம்... பேந்து எப்பவோ? எப்பி டியோ?' எண்டு இழுத்து நிப்பாட்டினார் கும ரேசர். நாங்கள் இருந்தஇடத்துக்குக் கிட்டவாயி ருந்த ஒராள் 'அண்ணை சொல்லுறமாதிரித்தான் நானும் கேள்விப்பட்டனான்... இப்பசெய்யிற வேலை ஐஞ்சோ ஆறோ வருசங்கூட தாக்குப் பிடிக்காதாம்... இது தற்காலிகமான முறை யாம்???' எண்டார்.

'அப்பிடித்தான்... கிடந்த றோட்டைக் கிளறி, கல்லுப்போட்டு இறுக்கி அதுக்குமேலை சல்லி பரவி அதுக்கு மேலைதானே காப்பெற்றை எல்லா இடங்களிலையும் போட்டவங்கள்... இஞ்சை அப்பிடியான வேலையளொண்டையுமே காணேல்லை....'எண்டு குமரேசர் முடிக்க முன் னம் 'நானுந்தான் உதுகளைப் பாக்கிறன்தானே... நீங்கள் சொல்லுறதுதான்....' எண்டார் அவர். 'இந்த றோட்டின்ரை தலைவிதி அப்பிடி?' எண் டார் குமரேசர்.

'றோட்டின்ரை தலைவிதியில்லை... எங்கடை தலைவிதி...எங்கடை தலைவிதியில்லே நடுத் தெருவிலை நிண்டு அல்லாடுது?' எண்டார் கதையிலை சேந்தவர். 'உண்மைதான்... எல் லாம் எங்கடை தலையிலைதான்... பருத்தித்துறை றோட்டு, பலாலி றோட்டு, கேக்கேஸ் றோட்டு அதுகளோடை நடந்திருக்க வேண்டின வேலை யல்லே இதுகும்? நாங்கள் செய்த வேலையள் தான்... அனுபவிக்கிறம்...' எண்டு முருகேசர் ஆமோதிச்சார்.

'முதலிலை றோட்டு அகட்டிறதுக்கு சம்மதிக் கயில்லை...பேந்து மானிப்பாய் ரவுணை விலத்தி நவாலிக்குள்ளாலை சமாந்தரமாய் போடுவ மெண்டு குழப்பியடிச்சு... அப்பிடிப் போட்டால் மானிப்பாய் ரவுண் பலகீனமாகுமெண்டு குழ ப்பி...பேந்து ரண்டுதடமில்லாமல் ஒரே தட மாய்ப் போடுவமெண்டு ஒரு மாதிரியாய் வாற நேரம் றோட்டுக்கரையளிலை கான் வெட்டிற திலை இழுபறி....' எண்டு கதையிலை சேந்தவர் சொல்லி முடிக்கயில்லை 'கொரோனா...பொரு ளாதாரக் குழப்பம்...' எண்டு முடிச்சு பெருமூச்சு விட்டார் குமரேசர்.

'ரண்டு மூண்டுதரமாய் வந்து வந்து திரும்பின காசு... இப்ப றோட்டுக்குப் பூச்சுப் பூசத்தான் காணுமாம். பூச்சு எத்தினை நாளைக்குத்தான் தாக்குப் பிடிக்கும்?' எண்டு முருகேசரும் ஆமோ திச்சார். 'சரியப்பா கிடக்கிற வரைக்கும் கிடக் கட்டன்....ஒண்டுமில்லாததுக்கு இதெண்டாலும் பறவாயில்லைத்தானே? எண்டல்லே எங்கடை யாக்கள் சொல்லுகினம்...அதுதான் எரிச்சலாக் கிடக்கு' எண்டார் கதையிலை சேந்தவர்.

'கிடக்கும் மட்டும் கிடக்கிறதுசரி...எத்தினை துலையப்போகுதோ? பறந்தடிக்கிறதுகளுக்கு இது வசதியல்லே? வாப்பா வெளிக்கிடுவம் எண்டு கதையை முடிச்சுக்கொண்டு எழும்பினம்.

துன்பானந்த சுவாமி

19

# மீட்டல்...



ஆடைகளது மாறுதல் என்பது கலாசார அடையாளங் களைச் சிதைக்கிறது என்பதும் ஒரு குற்றச்சாட்டாகவே இருந்துவருகிறது. கலாசராரம் சிதைகிறது பண்பாடு தொலைகிறது என்றெல்லாம் புலம்புவோர் ஆடைகளால் மட்டுந்தான் கலாசாரம் தொலைகிறது என்று கூறுவதில் உண்மை இல்லாமலில்லை. அதனைவிட எமது பண்பாடு சிதைவுறும் செயற்பாடுகள் இருப்பதையும் பேச வேண் டும்.

உணவுப் பழக்கம் ஆடைகளது பதிவு மட்டுமல்ல எமது ஏனைய பல விடயங்களிலும் நாம் பல தவறுகளை விட் டுக்கொண்டிருக்கிறோம். பிறப்பு தொடக்கம் இறப்பு

வரையான அத்தனை விடயங்களிலும் நாகரீகம் என்கிற பெயரில் நாம் தவறவிடுகிற விடயங்கள் ஏராளம். பிறப்பு என்கிற ஒரு விடயத்தை எடுத்துக்கொண்டால் இன்று நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? எமது முன்னோர் என்ன செய்தார்கள்?

கர்ப்பமான பெண்ணை எப்படிப் பராமரித்தார்கள்? தமது விளை பொருட்களாலான ஆரோக்கிய உணவை வழங்கினார்கள். தூயதான மென்மையான ஆடைகளை அணிவித்தார்கள். நீர்க்குடம்சுமத்தல் அம்மியில் அரைத்தல் ஆட்டுக்கல்லில் மாவரைத்தல் துணிதுவைத்தல் என் அன்றாட வேலைகளுக்கூடாக பெண்ணை உடலுறுதியுடனிருக்க வழிசெய்தார்கள். அம்மியிலரைத்த கறிக்கூட்டுச் சமையல் சாப்பாடு வழங்கினார்கள். கர்ப்பவதி உறவுகள் சூழ இயற்கையான மகிழ்வை அனுபவிக்க முழு வசதிகளையும் வழங்கினார்கள்.

கர்ப்பவதி மனமும் உடலும் முழுஉறுதியுடனான ஆரோக்கியத்துடனிருந்தாள். வயிற்றில் வளரும் குழந்தை தாயும் அறியாமல் தானும் அறியாமல் திடமாக வளர்ந்தது. வீட்டிலேயே அனுபவமிக்க மூதாட்டிகளால் மகப்பேற்று வசதிகள் செய்து உபசரிக்கப்பட்ட தாயும் சேயும் முழு ஆரோக்கியத்துடனிருந்தார்கள். இன்று?

நேர் எதிரான ஒருசூழலே உண்டு. ஆரோக்கியக்கேடான விரைவுணவுகள், குடிபானங்கள், காலநிலைக்குப் பொருந்தாத ஆடைகள், தனிமைச்சுழல் (இது பொருளீட்டல் கருதிய தூரஇட வாழ்வால் நிகழ்கிறது) போதிய அனுபவமற்றவர்களது வழிகாட்டல், இணையங்கள்வழி பெறப்படும் அரைவேக்காட்டுத்தனமான வழிகாட்டல்கள், அளவுக்கதியமான மருத்துவப் பரிசோதனைகளால் விளையும் கதிர்த்தாங்கங்கள், போசாக்கெனக் கருதி உள்ளெடுக்கும் இரசாயனங்கள் என நீளமான விடயங்களை இங்கே பேச முடியும்.

அன்றிருந்தவர்கள் படிப்பறிவற்றவர்கள், நாகரீகமற்றவர்கள், பட்டிக்காட்டார் என விழித்துக் கேவலமாக அழைக்கப்படுகின்ற நிலையில் இன்றை நாகரீகமாந்தராக நாம் உள்ளோம். உண்மையில் நாம்தான் அப்படியாக இருக்கிறோம் என்பதே உண்மையானது. முழுவதுமே செயற்கையை நம்பியதாக எமது இன்றைய வாழ்க்கைச் சூழலை எம்மீது நாமே ஏற்றிச் சுமந்து சீரழிந்துகொண்டிருக்கிறோம்.

பழமைப் பழக்கவழக்கங்களுள் இருந்த யதார்த்தபூர்வமான காரணங்களை சரிவர உணர்வதைத் தவிர்த்து விடுகிறோம். தவிர்த்துவிடுகிற பழக்கமானது எமக்குட் புகுத்தப்படுகிறது. எதையும் மூலம் கண்டடையக்கூடிய பகுத்துணரக்கூடிய அறிவை நாம்பெறுகிறோமா? அதனைப் பெற வழிகள் சரிவரத் தெளிவாக வகுத்துத் தரப்பட்டிருக்கிறதா? நிச்சயமாகச் சொல்லிக்கொள்ளும் நிலை இல்லையென்பதே உண்மை.

மூடநம்பிக்கைகள், கற்பிதங்கள் என சில விடயங்களிலுள்ள பாதக விளைவுகளை எம்முன்னோர் அனுபவித்து பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளர் என்பது யதார்த்தமானது. ஆனால் அதற்காக முற்றுமுழுதாக அவற்றை ஓரங்கட்டிவிட முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது. நாம் கற்பிதங்கள் மூடநம்பிக்கைகள் என்று பழையவற்றை உதாசீனம் செய்கிறோம். ஆனால் இன்றை மேம்போக்கான இணையக் கருத்துகளையும் விளம்பரங்களையும் கொண்டாடுகிறோம்.

அன்றிருந்த கருத்துகளை கற்பிதம் என்கிறோம். நாம் நம்புகிற அல்லது நம்பவைக்கப்பட்டிருக்கிற ஒருவர் வெளியிடும் கருத்துகளையும் சிபாரிசுகளையும் ஏற்றுக்கொண்டாடிப் பின்பற்றுகிறோமே? அவர்கள்மீதான கற்பிதங்களும் அவர்களது போதனைகளும் கற்பிதம் என்கிற வகைக்குள் அடங்காதா?

அன்றும் சரி இன்றும் சரி வழிப்படுத்தப்படும் ஒரு தொகுதியாகவே இருக்கிறோம். ஆனால் அன்றிருந்த ஆரோக்கியச் சூழலை இன்று தொலைத்திருக்கிறோம் என்பதிலிருந்து அன்றைய சூழலினது பெறுமதியை நாங்கள் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது. பழமையிலிருந்து கற்க வேண்டியவை ஏராளம். நிறையவே பேசலாம். பேசுவோம்.

இந்த வாரச் சொல்

# பச்சை

பச்சை என்பது நிறத்தைக் குறிப்பது. ஆனால் நிறத்தைத் தவிரவும் பல்வேறு அர்த்தங்களில் அது பயன்படுவதைக் காணலாம். நிறம் தவிரவும் இந்தப் பச்சை என்பதை வேறு அர்த்தங்களில் பலர் அன்றாடம் பயன்படுத்தினாலும் நிறத்தைக் குறிக்கும் ஒரு சொல் தமிழில் இவ்வாறு பல அர்த்தங்களைக் குறித்து நிற்பதை எவரும் கண்டுகொள்வதில்லை.

'பச்சைத் தண்ணி', 'பச்சை மா', 'பச்சை அரிசி' இவற்றில் வரும் பச்சை என்பது அவியாத, வேகாத, சூடாக்கப்படாதது என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப் படுகிறது.

'பச்சைத் தண்ணியாய்க் கிடக்கு', என்பதில் வரும் பச்சை என்பதன் அர்த்தம் சுவையில்லாமலிருத்தல் என்பதாகும்.

'பச்சைக் கள்ளன்', 'பச்சைப் பொய்' என்பவற்றில் வரும் பச்சை என்பது களவு, பொய் ஆகியவற்றை மிகைப்படுத்திக் கூற உதவுகின்றன.

'பச்சை பச்சையாய்க் கதைக்கிறான்' என்பதில் வரும் பச்சை என்பது பொதுவெளியில் பேசத்தகாதவற்றைக் கூச்சமின்றிக் கதைத்தலையும், அந்தரங்க, ஆபாசம் பற்றி வெளிப்படையாக அல்லது ஒளிவுமறைவின்றிப் பேசுதலையும் குறிக்கிறது.



# மாவீரன்

**கதை**

கார்ட்டூனிஸ்ட்டான சத்யா (சிவகார்த்திகேயன்) தனது அம்மா, தங்கையுடன் குடிசைப்பகுதியில் வாழ்ந்து வருகிறார். திடீரென ஒருநாள் அந்தப் பகுதி மக்களை அங்கிருந்து வெளியேறச் சொல்லி அரசு அறிவிக்கிறது. மேலும், அம்மக்களுக்கு மாற்று இடம் வழங்குவதாகக் கூறி, அடுக்குமாடி குடியிருப்புக்கு இடமாற்றம் செய்கிறார்கள். அந்த அடுக்குமாடி குடியிருப்பு தரமற்று மோசமான நிலையில் இருப்பதை எதிர்த்து முறையிடும் தன் தாயிடம் சமாளித்து வாழுமாறு சமரசம் செய்கிறார் பயந்த சுபாவம் கொண்ட சத்யா. இதன் நீட்சியாகத் தனது குடும்பத்துக்கு மற்றொரு பாதிப்பு நேரும்போதும் கூட, அதையும் தட்டிகேட்க முடியாமல் தன்னையே நொந்துகொள்ளும் அவர் உயிரை மாய்க்க முயல்கிறார். அப்போது நேரும் விபத்தில் அவர் வரைந்த கார்டூன் கதாபாத்திரத்தின் குரல் ஒன்று அசரீரியாய் ஒலிக்கிறது. அந்தக் குரல் கோழையான சத்யாவை எப்படி 'மாவீரன்'ஆக மாற்றுகிறது என்பதே படத்தின் மீதிக் கதை.

பெருநகர விரிவாக்கம், வளர்ச்சி என்ற பெயரில் குடிசைப் பகுதி மக்களை அவர்களின் சொந்த வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தி அவர்களுக்கு அந்நியமான புறநகர் பகுதிகளுக்கு தூக்கி அடிக்கும் அரசின் அவலப்போக்கை கருவாக எடுத்து அதனைச் சுவாரஸ்யமாக கொடுக்க முயன்றிருக்கிறார் இயக்குநர் மடோன் அஸ்வின். 'மண்டேலா' படத்தைப்போல இந்தப் படத்திலும் அவரின் சமூகப் பொறுப்பு கவனிக்க வைக்கிறது. தான் எடுத்துக்கொண்ட கருவைத் திரைப்படுத்திய முற்பகுதி திரைக்கதை ரசிக்க வைக்கிறது.

அடிமட்ட மனிதர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கதாபாத்திரத்தைத் தெரிவு செய்து நடித்ததற்குச் சிவகார்த்திகேயனைப் பாராட்டலாம். தனது வழக்கமான காதல், ரொமான்ஸ், இளைஞர்களை கவரும் ஜாலியான கதாபாத்திரங்களிலிருந்து விலகி நகரும் அவரின் முதிர்ச்சி கவனிக்க வைக்கிறது. அப்பாவியான பயந்த சுபாவமுள்ள இளைஞனாக அவரது நடிப்பு ஈர்க்கிறது. அதிதி சங்கரை இரண்டாம் பாதிக்கு மேல் எங்கு தேடியும் பார்க்க முடியவில்லை. முதல் பாதியில் தனக்கு கொடுத்த கதாபாத்திரத்துக்கு நியாயம் சேர்க்கிறார்.

அடித்தட்டு மக்களில் ஒருவராக யதார்த்த நடிப்பில் கவனம் பெறுகிறார் சரிதா. அரசியல்வாதியாகப் பொருந்திப் போகும் மிஸ்கின் கோவப்பட்டும் கத்தும் இடங்களில் 'சவரக்கத்தி' படக் கதாபாத்திரத்தை பிரதி பலிக்காமலில்லை. யோகிபாபுவை சரியாக பயன்படுத்தி யிருக்கிறார் இயக்குநர். அதேசமயம் சுனில் கதாபாத்திரம் வீண்டிக்கப்பட்டுள்ளது. தங்கையாக மோனிஷா நடிப் பில் குறைவைக்கவில்லை.

**பலம் பலவீனம்**

சிவகார்த்திகேயன் கதாபாத்திரத்துக்கான படிப்படி யான உருமாற்றமும் விஜய் சேதுபதியின் வாய்ஸ் ஓவ ரும். கூடவே யோகிபாபு வின் டைமிங் காமெடிங்கள் நிறைய இடங்களில் கைகொ டுப்பது பலம். வடமாநில தொழிலாளர்களால் தமிழக தொழிலாளர்களின் வாழ் வாதாரம் பாதிக்கப்படுவதாக யோகிபாபு கதாபாத்திரம் மூலம் காட்சிப்படுத்தியிருப் பது இன்னும் கூர்மையாக அணுகப்படவேண்டிய அர சியல். தவிர, அமைச்சரான மிஷ்கினை சாமானியனான சிவகார்த்திகேயன் தனது அப்பா வித்தனங்களுடன் எதிர்கொள்ளும் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன.



அதுவரை பயந்த சுபாவம் கொண்ட நாயகன் கதாபாத்திரத்தை மாவீரனாக மாற்றி மக்களுக்கான பிரச்சினைகளுக்கு துணை நிற்க வைக்கும் இரண்டாம் பாதியின் திரைக்கதையில் ஏகப்பட்ட சமரசம் செய்திருக் கிறார் இயக்குநர். தேவையற்ற சண்டைக்காட்சிகளால் நாயகனுக்கு கொடுக்கப்படும் பில்டப்புகள் வில்லன் கதாபாத்திரத்தை பலவீனப்படுத்துகிறது. சில காட்சிகள் பார்த்துப் பார்த்துப் புளித்தவை. அதைப் பின்தொடர்ந்து வரும் சில காட்சிகள் தேவையற்றவையாகவே கருதலாம்.

பாடல்கள் ரசிக்க வைக் கின்றன. பின்னணி இசை சண்டைக்காட்சிகளில் தனித்து தெரிகிறது. அருண் வெஞ்சார மூடு மற்றும் குமார் கங்கப் பனின் உழைப்பு திரையில் பிரதிபலிக்கிறது. அழுத்தமான கதையை வித்தியாசமான திரைக்கதையுடன் அணுக முயற்சித்த 'மாவீரன்' சில சமரசங்களுக்குள் சிக்கிக் கொண்டதால், படம் பெரிய ளவில் எடுபடவில்லை என்றே கூறலாம்.



இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781